ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1653/10 - 2010 මැයි 11 වැනි අඟහරුවාදා - 2010.05.11

*1653/10 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**பெலிஅத்த பிரதேச சபை**

பெலிஅத்த பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. கீகனஆரச்சிகே டெனி என்பவர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளமையால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென பெலிஅத்த பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஜயசிங்ஹ ஆரச்சிலாகே சமன்த பிரியலீல் ஜயசிங்ஹ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஜே. ஏ. எஸ். பி. ஜயசிங்க,<br>
தெரிவத்தாட்சி அலுவலர்,<br>
பெலிஅத்த பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,<br>
ஹம்பாந்தோட்டை,<br>
*2010, மே 2.*

*5 - 639*

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் நியாகம பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர் தவிசாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக நியாகம பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

நியாகம பிரதேச சபையின் துணைத் தவிசாளர், பிரசாத் ரணசிங்ஹ வீரக்கொடி எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான நியாகம பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65அ (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. காரியவசம் ஜாலத்கே சந்தன சமல் தேவிந்த என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.

இப்போது நியாகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. காரியவசம் ஜாலத்கே சந்தன சமல் தேவிந்த என்பவர், நியாகம பிரதேச சபையின் துணைத்தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. பி. ஐ. த சில்வா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நியாகம பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
2010, ஏப்பிறல் 22.

5 - 640

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், நுவரகம்பலாத மத்திய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதன் காரணமாக நுவரகம்பலாத மத்திய பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியிருக்கின்ற தாதலாலும் ;

விஜேசூரிய ஆரச்சிலாகே ராஜா அபேவிக்ரம என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் நுவரகம்பலாத மத்திய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் தகுதியுள்ள ஆளொருவராக, திரு. பீ. ஜி. ஜி. குணவர்தன என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது நுவரகம்பலாத மத்திய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், எஸ். எம். சமன் பந்துலசேன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. பீ. ஜி. ஜி. குணவர்தன என்பவர், நுவரகம்பலாத மத்திய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். எம். சமன் பந்துலசேன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நுவரகம்பலாத மத்திய பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அநுராதபுரம்,
2010, மே 03.

5 - 641

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.